பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

46 ] சென்னை—ஞாயிறு, பிப்ரவரி 23, 1947. [ விலை. அணா 2

## சமூக பகிஷ்காரம்

காந்தியடிகள் பிப்ரவரி 15-ந் தேதி ரெய்ப்பூரா என்னும் கிராமத்தில் பிரார்த்தனை பிரசங்கம் செய்த பொழுது அவரிடம் கீழ்க்கண்ட கேள்வி கேட்கப்பட்டது :—

கேள்வி :—முஸ்லீம்கள் ஹிந்துக்களை எல்லா விதத்திலும் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் இதுவரை ஹிந்துக்களுக்கு வேலை செய்துகொண்டிருந்த முஸ்லீம்கள் ஹிந்துக்களுக்கு உதவி செய்தால் முஸ்லீம்களால் பகிஷ்கரிக்கப் படுவார்கள் என்றும் ஒரு பேச்சு நவகாளி ஜில்லா முழுவதிலும் கிளம்பியிருக்கிறது. உண்மையாகவே சமாதானம் ஏற்பட வேண்டுமென்று விரும்புகிற முஸ்லீம்கள் செய்ய வேண்டியது யாது?

இந்தக் கேள்விக்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது:-

"இத்தகைய பகிஷ்காரத்தைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டேன். இப்பொழுது இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு குஜராத்திலிருந்தும் பஞ்சாபிலிருந்தும் என்னைப் பார்க்க முஸ்லீம்களை நவகாளி முஸ்லீம்கள் என்னைப் பார்க்க எப்படி துணியலாமென்று பயமுறுத்தியதாக தெரிகிறது. அத்துடன் ரெய்ப்பூராவில் முஸ்லிம்கள் ஹிந்துக்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் "முஸ்லீம் பிட்டூனி கட்சி" என்று கையெழுத்திட்டிருக்கிறது. பிட்டூனி என்பதற்கு பலாத்காரமான என்று பொருளாம். இந்தக் காரியங்கள் யாரையும் பயமுறுத்திவிட முடியாது என்று முஸ்லீம் நண்பர்களுக்கு வற்புறுத்தி கூற விரும்புகின்றேன். சமூக பகிஷ்காரம் இங்கொன்று அங்கொன்றாக நடைபெற்றால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். பல இடங்களில் விஸ்தாரமாக நடைபெற்றால் அதை சர்க்கார் தடுத்துவிடுவார்கள். ஆனால் சமூக பகிஷ்காரம் சர்க்காருடைய கொள்கையாக இருக்குமானால் அது கவனிக்கப்படவேண்டிய விஷயமேயாகும். நான் அஹிம்சை முறையையே கூறமுடியும். போதுமான நஷ்டஈடு கொடுத்தால் அதை வாங்கிக்கொள்ளலாமென்றே எண்ணுகிறேன். நஷ்டஈடு கொடாமல் பறிமுதல் செய்யவந்தால் அதற்கு இடங்கொடுக்கலாகாது. உயிர் போனாலும் வீட்டைவிட்டு போக மாட்டோம் என்று உறுதியாக நிற்கவேண்டும். நஷ்டஈடு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் சமூக பகிஷ்காரம் செய்யவேண்டும் என்னும் கொள்கையை எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாதென்றே நம்புகிறேன்.

## தீண்டாமை விலக்கு

ரெய்ப்பூரா என்னும் கிராமத்தில் காந்தியடிகள் ஜனங்களிடம் கூறியதாவது :—

தீண்டாமை என்னும் கறை இருக்கும்வரை இந்தியாவில் உண்மையான சமாதானமோ சுதந்திரமோ இருக்க முடியாது. பிரிட்டிஷார் போய்விடுவார்கள்; ஆனால் தீண்டாமை இருந்தால் நமக்கு சுதந்திரம் சித்திக்காது. நாம் நம்முடைய மனத்தை சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தீய வழக்கங்களை விட்டுவிடவேண்டும். மத வித்தியாசங்களை மறந்துவிட்டு ஒன்று சேரவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் ஹிந்துஸ்தானமும் ஏற்படாது பாகிஸ்தானமும் ஏற்படாது. இருநூறு வருஷகாலமாக அடிமைகளாய் இருப்பது போலவே இனிமேலும் இருந்து வருவோம்."

காந்தியடிகள் அன்று நண்பகல் அரைமைல் தூரத்துக்கு அப்பால் 2000 ஜனங்கள் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதை பார்ப்பதற்காக போயிருந்தார். அதை ஏற்படுத்தியவரிடம் முஸ்லீம்களும் இதில் கலந்து கொள்ளலாமா? என்று காந்தியடிகள் கேட்டார்.

அதற்கு அந்த நண்பர் கீழ்க்கண்டவாறு பதில் கூறினார்:—"ஹிந்துவோ ஹரிஜனனோ முஸ்லீமோ யார் வந்தாலும் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறோம். நண்பர்களை வரவேற்க சித்தமாய் இருக்கிறோம். எங்கள் மனத்தை திறந்துவிட்டோம். முஸ்லீம்களும் தங்கள் மனத்தை திறந்துகொண்டு எங்களுடன் தாராளமாக வந்து சேர்ந்துகொள்ளலாம். தாங்கள் ராமையும், ரஹீமையும், கிருஷ்ணனையும், கரீமையும், ஈஸ்வரனையும், அல்லாவையும் சேர்த்திருக்கிறீர்கள். நாங்கள் சந்தோஷமாக உங்களை பின்பற்றி நடக்கின்றோம்."

காந்தியடிகள் நடத்தும் ராமநாம பஜனைப் பாடலின் முதல்வரி :—

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீத்தா ராம்

இந்த வரியோடு கீழ்க்கண்டவரி இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது :—

ஈஸ்வர் அல்லா தேரே நாம்
சக்கோ சன்மதி தே பகவன்

இதன் பொருள் :—

உம்முடைய நாமம் ஈஸ்வரன் அல்லா இரண்டுமாகும். எங்களெல்லோரையும் சரியான வழியில் நடத்தியருளும்.

காந்தியடிகள் நவகாளிக்கு வந்த பிற்பாடு புதிதாக ஒரு பாடல் செய்யப்பட்டிருக்கிறது :—

பஜமன பியாரே ராம ரஹீம்
பஜமன பியாரே கிருஷ்ண கரீம்

இப்படி புதிதாக சேர்க்கப்பட்ட வரிகளும் பாடல்களும் தினந்தோறும் பிரார்த்தனை செய்யும் பொழுதும் பிரயாணம் செய்யும் பொழுதும் பாடப்படுகின்றன.

## நஷ்ட ஈடு கொடுத்தால்

அலூனியா என்னும் கிராமத்தில் பிப்ரவரி 19-ந்தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் நண்பர் ஒருவர் கேட்ட கேள்வி :—

“லீக் சர்க்காரோ பெரும்பான்மை சமூகத்தாரோ நியாயமான நஷ்டஈடு கொடுக்க ஒப்புக்கொண்டால் ஹிந்துக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறுவதை தாங்கள் ஆதரிக்கிறீர்களா?”

காந்தியடிகள் பதில் :—

“அஹிம்சா முறையில் நான் அதை ஆதரிக்கிறேன். பெரும்பான்மை சமூகத்தார் முஸ்லீமாயிருந்தாலும் ஹிந்துவாயிருந்தாலும் எல்லா மாகாணங்களுக்கும் இது பொருந்தும். பெரும்பான்மை சமூகத்தார் சிறுபான்மை சமூகத்தாரை தங்களுடன் வைத்துக் கொள்ள மாட்டோமென்று ஒரே பிடிவாதமாக சொல்லுவார்களானால் சர்க்கார்தான் என்ன செய்ய முடியும்? சர்க்கார் பெரும்பான்மை சமூகத்தாரை கட்டாயப்படுத்துவதும் சிறுபான்மை சமூகத்தாரை ஆயுத பலத்தைக்கொண்டு பாதுகாப்பதும் சரியல்ல. பெரும்பான்மை சமூகத்தார் ராமநாம பஜனை செய்வதை சகிக்கவில்லை என்றும் ராமன் என்றால் கடவுளையே குறிக்கிறது என்பதை செவிசாய்த்து கேட்கவில்லை என்றும் ஹிந்துக்கள் தாளம்போட்டு பஜனை செய்வதில் நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுவோம், அந்த நிலைமையில் போதுமான நஷ்டஈடு கொடுத்தால் சிறுபான்மை சமூகத்தார் வீட்டைவிட்டு போய்விட வேண்டுமென்றே கூறுகிறேன்”

## தாழ்த்தப்பட்டவர்களும் காங்கிரஸ் ஊழியர்களும்

சமீபகாலம் வரையில் வேலை நிறுத்தம் போன்ற குழப்பங்கள் பெரிய தொழிற்சாலைகளிலும் நகரங்களிலுமே காணப்பட்டன. ஆனால் இப்பொழுது சிறிய பட்டணங்களிலுள்ள தோட்டிகள் போன்ற தொழிலாளர்களும்கூட சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அது போலவே சூரத் ஜில்லாவிலுள்ள ஹாலி ஜாதியாரும் மலைகளிலுள்ள ஆதிவாசிகளும் நிலச்சுவாந்தார்களையும் லேவாதிகாரர்களையும் எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த மாதிரி காரியங்கள் நடக்கும் பொழுது நாம் அவைகள் நியாயந்தானா என்று ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக கிசான் சபையும் செங்கொடிக்காரர்களும் கம்யூனிஸ்டுகளுமே அவைகளை உண்டாக்குகிறார்கள் என்று முடிவு செய்துவிடுகிறோம். அவர்கள் உண்மையையும் நியாயத்தையும் பொருட் படுத்தாமல் ஜனங்களுடைய அறியாமையை பயன்படுத்திக்கொண்டு அவர்களை பலாத்காரத்தில் இறங்குப்படியாக செய்து ஏழை மக்களுக்கு கேடு செய்து வருகிறார்களென்று சுலபமாய்ச் சொல்லிவிடுகிறோம். அத்துடன் 50, 60 போக்கிரிகளை வைத்துக்கொண்டு தொழிலாளர்களை பயமுறுத்தி வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கிறார்களேயன்றி தொழிலாளர்கள் தாங்களாக வேலை நிறுத்தத்தில் இறங்குவதில்லை என்றும் கூறிவிடுகிறோம். அதனால் இப்படி கிளர்ச்சி செய்கிறவர்களையும் அவர்கள் கூலிக்கு அமர்த்தும் போக்கிரிகளையும் அடக்குவதைத் தவிர வேறு வழி கிடையாது என்று முடிவும் செய்து விடுகிறோம்.

இந்தக் குற்றச்சாட்டுகளில் ஏதோ கொஞ்சம் உண்மை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அது எனக்கு திருப்தியளிப்பதாய் இல்லை. தொழிலாளர்கள் யோசனை கேட்கவும் தங்களுடைய குறைகளுக்கு பரிகாரம் தேடவும் காங்கிரஸ்காரர்களிடம் செல்லாமல் துஷ்டத்தனம் செய்யும் அந்தக் கிளர்ச்சிக்காரர்களிடம் செல்லுவது ஏன்? காங்கிரஸ்காரர்களாகிய நாம் தொழிலாளர்களிடையில் இருபது வருஷகாலமாக வேலை செய்து வருகிறோம் என்றும் நாமே அவர்களுக்கு சேவை செய்கிறோம் என்றும் நல்ல யோசனை கூறுகிறோம் என்றும் சொல்லுகிறோம். நம்முடைய ஸ்தாபனங்கள் வெகு நாளாகவும் வெகு திறமையாகவும் நடந்து வருகின்றன. இப்பொழுது சர்க்கார் அதிகாரமும் நம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது. அப்படியிருந்தும் கிளர்ச்சிக்காரர்களுடைய மாயவலையில் சிக்காமல் இருக்கவும் போக்கிரிகளுக்கு அஞ்சாமல் இருக்கவும் நாம் தொழிலாளர்களுக்குப் போதிய பலமும் அறிவும் உண்டாக்க முடியாமல் இருக்கிறோமே அதன் காரணமென்ன? ஆதலால் விஷயத்தை தீர்க்கமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதன் காரணமாக நம்முடைய மனப்பான்மை தவறு என்று காணப்படுமானால் நானும் குற்றவாளியே என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். நான் காங்கிரஸ்காரர்களை குறைகூறுவதற்காக இந்தக் கட்டுரை எழுதவில்லை. உண்மையை அறிவதற்காகவே எழுதுகிறேன்.

மேற்கூறிய தோட்டிகள் முதலியவர்கள் மிகுந்த கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள். நம்மில் எத்தனை பேர் அவர்களிடம் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கிறோம் என்று கேட்கிறேன். பணமுடையவர்கள் இந்த ஜனங்களின் உழைப்பைக்கொண்டே உயிர் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மறுக்க முடியாது. பணக்காரர்கள் தங்களை உயர்ந்தவர்களாக கருதிக்கொள்ளுகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஏழைகளை அவமானத்திற்கு உள்ளாக்க தவறுவதில்லை. ஏழைகள் தரித்திர நிலைமையிலேயே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஊழியர்களாகிய நாம் இந்த விஷயத்தை அவர்களிடம் தெளிவாகக்கூற தைரியமில்லாதவர்களாய் இருக்கிறோம். அவர்களுக்கு கோபம் வந்துவிடும், அவர்கள் பொதுக் காரியங்களுக்கு செய்துவரும் உதவிகளை நிறுத்திவிடுவார்கள், நம்முடன் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று அஞ்சுகிறோம். ஆதலால் இந்த விஷயங்களை வெளியில் சொல்லாமல் மௌனமாக இருந்து நம்முடைய மூலாதாரமான கொள்கைகளை காற்றில் பறக்க விட்டுவிடுகிறோம். பணக்காரர்களை விரோதிக்க தைரியமில்லாததால், அவசரம் வேண்டாம் மெதுவாய்ச் செய்வோம் என்று வேதாந்தம் பேசுகிறோம்.

---

சட்ட சபைக்கோ நகர சபைக்கோ ஜில்லா போர்டுக்கோ தேருதல் வரும் பொழுது, சம்பள உயர்வுக்கான வேலை நிறுத்தங்கள் நியாயமாகவும் அவசியமாகவும் இருந்த போதிலும், அந்தச் சமயம் அவைகளை நிறுத்தி வைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அவைகளை நடத்தினால் ஓட்டுக் கிடைப்பது கஷ்டமாகுமென்று எண்ணுகிறோம். அபேட்சகர்களை பொறுக்கும் விஷயத்திலும் அவர்களுடைய திறமையையோ அவர்களுக்கு கொள்கையிலுள்ள உறுதிப்பாட்டையோ எண்ணிப் பாராமல் அவர்களுடைய செல்வாக்கையும் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வெற்றியையுமே பிரதானமாகக் கருதுகிறோம். அதனால் தான் நாம் ஜாதிகளை ஒழிக்க வேண்டுமென்று வாயால் கூறிய போதிலும் காரியத்தில் ஜாதிகளுக்கே அதிகமான மதிப்பைக் கொடுக்கிறோம். இந்த மாதிரி பொறுக்கப்படும் அபேட்சகர்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்டால் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் எவ்விதச் சிரத்தையும் காட்டுவதில்லை. ஹரிஜன் மாணவர்களை போர்டு பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சர்க்கார் தீர்மானம் செய்திருந்த போதிலும் பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் விஷயத்தில் ஹரிஜன ஸேவா சங்கத்தார் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். எந்தப் போர்டும் இது விஷயத்தில் அக்கறை எடுத்து கொள்ளுவதாகத் தெரியவில்லை.

ஜலக்குமிழி தங்கத்துக்குச் சமமானால் உயர்ந்த மூளையும் உண்மையான உள்ளத்துக்குச் சமமே—ஹோம்ஸ்.

பம்பாய் சர்க்கார் குடியானவர்களை பாதுகாப்பதற்காக ஒரு சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அது நிலச் சுவான்தார்களுக்கு அதிக கஷ்டம் கொடுப்பதாயுமில்லை. அப்படியிருந்தும் சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் சிலர் அந்தச் சட்டத்தை ஆட்சேபித்துக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சட்டப்படி குடியானவர்கள் விளைந்த மாசூலில் இதுவரை நிலச் சுவான்தார்களுக்கு பாதி கொடுத்து வந்ததிற்குப் பதிலாக இனிமேல் மூன்றில் ஒரு பகுதியை கொடுப்பார்கள். அத்துடன் குடியானவர்களிடமிருந்து நிலத்தை எளிதில் பிடுங்கிவிட முடியாமலும் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் குடியானவர்கள் நிலத்தை செழிப்புடையதாகச் செய்வார்கள். அப்போது அதிகமான மாசூல் கிடைக்கும். அதனால் நிலச் சுவான்தாருக்கு மூன்றில் ஒரு பகுதியானாலும் முன் கிடைத்த பாதிக்கு அதிகமாகவே கிடைக்கும். அப்படியிருந்தும் அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

சூரத் ஜில்லாவில் ஹாலி என்ற விவசாய தொழிலாளிகள் அடிமைகளை விட கேவலமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை உயர்த்த முயன்றால் உடனே நிலச் சுவான்தார்களாகிய காங்கிரஸ்காரார்களுக்கு கோபம் உண்டாகி விடுகிறது. உடனே திட்ட ஆரம்பித்து விடுகிறார்கள்.

காங்கிரஸ்காரார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களுடைய மனப்பான்மை இதுவானால், காங்கிரஸ் ஊழியர்களில் பெரும்பாலோர், இந்த வேலையைச் செய்யும் எங்களுக்கு உற்சாகம் அளியாமல் முட்டுக்கட்டை போடுவார்களானால் இந்த ஏழை மக்கள் பலாத்காரத்தின் மூலமாகவே பரிகாரம் தேட முடியும் என்ற நம்பிக்கையுள்ள கிசான் சபையின் யோசனை கேட்பதில் என்ன ஆச்சர்யமிருக்கிறது?

காங்கிரஸ் சபையானது ஏழைகளுக்காகவும் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவுமே உயிர் வாழ்வதாக எப்பொழுதும் கூறி வந்திருக்கிறது. அரசியல் நிர்ணய சபையும் அந்த லட்சியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் காங்கிரஸ் ஊழியர்களாகிய நாமோ ஏழைகளைச் சுரண்டும் முதலாளிகளுக்கும் கள்ள வியாபாரம் செய்யும் சமூக துரோகிகளுக்கும் அதிருப்தி உண்டாக்க தைரியமில்லாதவர்களாய் இருக்கிறோம். காங்கிரஸ் லட்சியத்துக்குத் தக்கபடி நாம் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டிய நியாயமான வேலைகளில் இறங்குவோமானால் பணக்காரர்கள் அக்கிரமமாக கொள்ளையடிக்கும் பெரும் லாபம் பாதிக்கப்பட்டுவிடும். ஆனால் ஏழைத்தொழிலாளி மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள். தங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டு விட்டார்கள். அவர்கள் கிளர்ச்சிக்காரர்களுடைய வலையில்சிக்குவார்களானால் அதற்குக் காரணம் நாம்தான். இங்கிலாந்து தேசத்தில் யுத்தத்தை திறமையுடன் நடத்தி வெற்றி கண்டவர் சர்ச்சில், ஆனால் அவரும் கூட புதிதாக எழுந்துள்ள உணர்ச்சியை மதியாமல் பணக்காரர்களை ஆதரிக்க ஆரம்பித்ததால் படுதோல்வி அடைந்தார். அதுபோல் காங்கிரஸ்காரர்களாகிய நாமும் நடந்தால் அதே கதிதான் அடைவோம்.

நரகரி பரேக்.

## அநியாயமான கோரிக்கை

இங்கிலாந்து இந்தியாவுக்கு கொடுக்க வேண்டிய கடன்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக பட்சபாதமற்ற நியாய சபை ஒன்றை நியமிக்க வேண்டுமென்று கூறி வருகிறோம். இங்கிலாந்திலுள்ள பெரிய அரசியல் தலைவர்கள் கொஞ்சமும் பொறுப்பற்ற தன்மையில் கூறி வரும் கோரிக்கைகளைப் பார்த்தால் அத்தகைய நியாய சபை அவசியந்தான் என்பது விளங்கும். யுத்த காலத்தில் பிரதம மந்திரியாக இருந்த திரு. சர்ச்சில் பார்லிமெண்ட் சபையில் கீழ்க்கண்டவாறு கூறினார்;—

"இந்தியாவை நிலம் கடல் ஆகாயம் மூன்றிலும் காப்பாற்றி அயல் நாட்டு படையெடுப்பை தடுத்து இந்திய சுதந்திரத்தை பாதுகாத்திருப்பதால் சமயம் வரும்பொழுது இங்கிலாந்து அதற்காகத் தான் செலவு செய்த பணத்தை இந்தியாவிடம் கேட்க வேண்டி வரும் என்று முன்னாலிருந்த வைசிராய்க்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறது."

இந்தக் கூற்றை கவனிக்கும் பொழுது நியாய சபை மூலமாக தீர்மானிப்பதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன என்பது தெளிவாகும்.

ஜப்பான் இந்தியா மீது படை எடுக்க வேண்டிய காரணம் என்ன? ஜப்பானுக்கோ, ஜெர்மனிக்கோ இந்தியாவில் பிரிட்டிஷாரைத் தவிர வேறு பகைவர்கள் கிடையாது. ஆதலால் பிரிட்டிஷார்தான் சகல செலவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும். அதுமட்டுமன்று. யுத்த காலத்தில் பிரிட்டிஷார் இங்குள்ள காடுகளை வெட்டிப் பாழாக்கி விட்டார்கள். பஞ்சம் ஏற்படும்படி செய்து லக்ஷக் கணக்கான இந்திய மக்களை எமனுக்கு இரையாக்கினார்கள். விதைப்பதற்காக வைத்திருந்த தானியங்களையும் கூட வெளியே அனுப்பி விட்டார்கள். பணப்பெருக்கம் உண்டாகச் செய்து தேசத்தின் பொருளாதார நிலைமையை கெடுத்து விட்டார்கள். அதனால் ஜனங்கள் அவசியமான பொருள்கள் கிடையாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைக் கஷ்ட நஷ்டங்களுக்கு காரணமாய் இருந்தபடியால் பிரிட்டிஷார் தான் நமக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதாகும். 1943-ம் வருஷத்தில் வங்காளத்தில் பஞ்சத்தால் 30 லட்சம் ஜனங்கள் இறந்து போனார்களே அதற்கு எந்த முறையில் நஷ்ட ஈடு நிர்ணயிக்க முடியும்?

இதெல்லாம் போதாதென்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை இன்னும் விநோதமான யோசனைகளையும் பயமுறுத்தல்களையும் கூற முன் வந்திருக்கிறது. யுத்த காலத்தில் இந்தியா இங்கிலாந்துக்கு கொடுத்த கடனை திருப்பிக் கேட்பதாய் இருந்தால் இங்கிலாந்து அமெரிக்காவின் அனுமதியோடு திருப்பிக் கொடாமல் இருந்துவிட வேண்டுமென்று சொல்லுகிறது. அமெரிக்காவை தீர்ப்புச் சொல்லும்படி அழைத்தது யார்? இங்கிலாந்து வரி வருமானத்திலிருந்து இந்தக் கடனை கொடுக்க முடியாததினாலேயே இந்த யோசனையை கூற வேண்டியிருக்கிறதாம். ஒருவர் பாப்பர் என்று விண்ணப்பம் கொடுத்தால் அவருடைய சொத்துக்களையும் நிலுவைகளையும் நிர்ணயிக்காமல் பாப்பர் என்று தீர்மானிப்பது உண்டா? இங்கிலாந்து பட்ட கடனை கொடுக்க முடியாதென்று நேராகச் சொன்னால் அதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் இப்பொழுது சொல்லும் அநியாயமான கோரிக்கைகளும் யோசனைகளும் பொருளாதார நிபுணர்களாகிய பிரிட்டிஷாருக்கு அழகானவை அல்ல.

இந்த அநியாயமான கோரிக்கைகளை அநியாயம் என்று காட்ட வேண்டுமானால் பாரபட்சமற்ற நியாய சபை ஏற்படுத்துதல் அவசியமாகும். அப்பொழுது திரு. சர்ச்சிலும் டைம்ஸ் பத்திரிகையும் தங்கள் கட்சியை எடுத்துரைக்க சந்தர்ப்பம் பெறுவார்கள். இத்தகைய நீதி சபையை ஏற்படுத்த காலதாமதம் செய்யமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

ஜே. ஸி. குமரப்பா

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

பிப்ரவரி 23, ஞாயிறு 1947


## ஜாதியும் தரித்திரமும் இல்லாத சமூகம்

காந்தியடிகள் பிப்ரவரி 12-ந் தேதி கபிலதலி என்னும் கிராமத்தில் செய்த பிரார்த்தனை பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு கூறினர் :—

" நான் சிருஷ்டிக்க விரும்பும் சுதந்திர இந்தியாவில் ஜாதி வித்தியாசமும் இருக்காது. ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமும் இருக்காது. பாப்பர்களும் பணக்காரர்களும் இருக்கவேண்டிய அவசிய மில்லை. எல்லாப் பொருள்களும் அரசாங்கத்திற்கே சொந்தமாய் இருக்கும். அரசாங்கம் எல்லா ஜனங்களுக்கும் சொந்தமானதாகும். எல்லா ஜனங்களும் மத விஷயத்திலும் பண்பாடு விஷயத்திலும் பரிபூர்ண சுதந்திரம் உடையவர்களாய் இருப்பார்கள். பல மதங்களை அனுஷ்டித்த போதிலும் பரிபூர்ணமாக நண்பர்களாகவே வாழ்வார்கள். என்னுடைய இந்தக் கனவை நனவாக்கும் காரியத்திற்கு என்னுடைய உயிரைக் கொடுக்கவும் தயாராயிருக்கிறேன். இந்தியாவில் சகோதரர்கள் சண்டை யிட்டுக்கொள்வதை பார்த்துக்கொண்டு வாழ நான் விரும்ப வில்லை. தீண்டாமை யானது உண்மையாகவே ஒழிந்து போகுமானல் ஜாதியும் ஒழிந்துபோகும். ஜாதி முறை இருக்கும்வரை தீண்டாதவர்கள் உயர்ந்த ஜாதியாராக ஆக விரும்புவது சகஜமே. ஆனல் அது முடியாத காரியம். ஜாதிகள் ஒழிந்துவிட்டால் எல்லோரும் ஹிந்துக்கள் என்ற ஒரே வகுப்பாக ஆகிவிடுவார்கள். தீண்டாதவர்கள் தங்களிடையே உள்ள ஜாதி வித்தியாசங்களை ஒழித்துவிடவேண்டும். ஜாதி ஹிந்துக்களைவிட அதிக சுத்தமானவர்களாக ஆகவேண்டும். தங்களுக்கு தனியாக விசேஷ சலுகை வேண்டுமென்று கேட்பதற்குப் பதிலாக ஹிந்து சமூகம் என்னும் கடலில் ஐக்கியமாய்விட வேண்டும்.

நவகாளியிலுள்ள ஹிந்துக்கள் தனியாக வாழவும் தனியாக வேலை செய்வதற்கு வேண்டிய கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்தவும் வேண்டுமா என்று என்னிடம் கேட்கிருர்கள். கூடவே கூடாது என்றே நான் கூறுவேன். அப்படிச் செய்தால் நாடெங்கும் பாகிஸ்தான் என்னும் விஷத்தை பரப்பியவர்கள் ஆவோம். அதுவன்று சுதந்திர மடைவதற்கான வழி. அது நமக்குள் சண்டை ஏற்படுத்துவதற்கான வழியே ஆகும். எல்லா மதத்தாரும் நண்பர்களாக ஒன்று சேர்ந்தே வாழவும் வேலை செய்யவும் வேண்டும்.

## சிறந்த மருந்து

தேசத்தில் சமூக ஒற்றுமை போன்ற பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு நிர்மாணத் திட்டமே சிறந்த சாதனம் என்று காந்தியடிகள் உறுதி கூறுகிருர். அவர் காஜிர்கில் என்னும் கிராமத்திலிருந்து ஆசிரியர் ஜே. ஸி. குமரப்பாவிற்கு எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிருர் :—

"நான் இதுவரை செய்த வேலைகளிலெல்லாம் இங்கே நான் செய்து கொண்டிருக்கும் வேலைதான் மிகுந்த கஷ்டமானதாகும். தேசத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் தங்கள் இடங்களில் சரியானபடி வேலை செய்து வருவார்களேயானல் இங்கு செய்யப்படும் வேலைக்கு உதவி செய்தவர்கள் ஆவார்கள். நீங்கள் அங்கே கிராம சேவை செய்து வருகிறீர்கள். இங்குள்ள வேலை வெற்றி பெறுவது நீங்கள் அங்கே செய்யும் வேலையைப் பொறுத்ததாகும். நான் கிராமம் கிராமமாய்ச் சென்று ஜனங்களிடம் சுகாதார முறையையும் கைராட்டினத்தையும் கைத்தறியையும் அந்தந்தக் கிராமத்தில் காணப்படும் கைத்தொழிலைப் பற்றியும் கூறி வருகிறேன். அதிலிருந்து உங்கள் வேலை எவ்வளவு கஷ்டமான வேலை என்பதை அறிவேன்."

## கேள்வியும் பதிலும்

பிஷாயி நகர் என்னும் கிராமத்தில் பிப்ரவரி 10-ந் தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் சில முஸ்லீம் நண்பர்கள் காந்தியடிகளிடம் சில கேள்விகள் கேட்டார்கள். அந்தக் கேள்விகளும் காந்தியடிகள் கூறிய பதில்களும் வருமாறு :—

கேள்வி : முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் இருக்கும் முஸ்லிம்களுக்கும், ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் இருக்கும் ஹிந்துக்களுக்கும் பரிபூரண சுதந்திரம் வழங்குவதே பாகிஸ்தான் என்பதன் பொருளாகும். அப்படியிருக்க காங்கிரஸ் அதை ஆட்சேபிப்பது ஏன் ?

பதில் : முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களிலிருக்கும் முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களிலிருக்கும் ஹிந்துக்களுக்கு மட்டுமே சுதந்திரம் கொடுப்பது பாகிஸ்தான் என்ருல் அதை உடனே மறுக்க வேண்டியதே ஆகும். அதிர்ஷ்டவசமாக எந்த முஸ்லிம் தலைவரும் பாகிஸ்தானுக்கு அந்தப் பொருளைக் கூற வில்லை. பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் சுதந்திரமுடையவர்களாகவும், அங்குள்ள முஸ்லிம்கள் அடிமைகளாகவும் இருக்கவேண்டுமா ? அல்லது வங்காளத்தில் ஹிந்துக்கள் அடிமைகளாக இருக்கவேண்டுமா ? இந்த அர்த்தத்தை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

கேள்வி : காங்கிரஸுக்கும்—லீகுக்கும் இடையில் வித்தியாசம் ஏற்பட்டிருப்பதே இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் மூல காரணம் அல்லவா? அதனல் வித்தியாசங்கள் இருக்கும் வரை, ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட முடியுமா ? ஏற்பட்டாலும் எவ்வளவு நாளைக்கு அது நீடித்து நிற்கமுடியும் ?

பதில் : காங்கிரஸுக்கும் லீகுக்கும் இடையில் வித்தியாசங்கள் இருக்கும் வரையில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட முடியாது என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். ஆயினும் நவகாளியிலுள்ள ஹிந்துக்களும்—முஸ்லிம்களும் உண்மையாகவே சகோதரர்கள் போல் நடந்து கொள்ள முடியுமென்று இந்தியா முழுவதற்கும காட்டுவதோடு காங்கிரஸுக்கும்—லீகுக்கும் காட்ட முடியுமென்று நம்புகிறேன். அதற்காகத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். என்னுடைய அஹிம்சை பரிசுத்தமாய் இருக்குமானல் அது நிறைவேறும். அது நிறைவேருவிட்டால் அந்தக்குறை என்னைச் சார்ந்ததே அன்றி அஹிம்சையைச் சார்ந்ததன்று. அஹிம்சைக்கு தோல்வி என்பது தெரியாது.

கேள்வி : இங்குள்ள முஸ்லிம்கள் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் ஹிந்துக்களிடம் நல்ல விதமாக நடந்து கொள்வதாக கூறும் வாக்குறுதிகளை நிறைவேற்றி வந்திருக்கிருர்கள். அப்படியிருக்க ஹிந்துக்கள் திரும்பிவாராமல் இருப்பது ஏன் ? வேண்டுமென்று வித்தியாசத்தை விருத்தி செய்வதற்குத் தானே ?

பதில் : ஹிந்துக்கள் பலர் வேண்டுமென்று திரும்பி வராமல் இருக்கிருர்கள் என்று நான் எண்ண முடியாது. யாரானலும் வெளியே விசேஷ சௌகரியங்கள் இருந்தால் தான் வீட்டுக்கு திரும்பிவராது

இருப்பார்கள். அத்தகைய விசேஷ சௌகரியங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரியவில்லை. அவர்கள் திரும்பிவராமல் இருப்பதற்கு காரணம் பயமும் கையில் பணம் இல்லாததும் தான். ஆயினும் திரும்பி வருகிறவர்கள் தொகை திருப்திகரமாக இருப்பதாகவே உத்தியோகஸ்தர்கள் என்னிடம் கூறுகிறார்கள். அதனால் வேண்டுமென்று வராமல் இருப்பதாக சொல்ல முடியாது. யாரேனும் ஹிந்துக்களை திருப்பிவர ஒட்டாமல் தடுப்பதாக இருந்தால் அவர்களை தண்டிக்க வேண்டியது அவசியமாகும். முஸ்லிம்கள் பெரும்பாலோர், திரும்பிவருவதை உண்மையாகவே விரும்பினால் ஹிந்துக்கள் சந்தோஷமாக திரும்பி வருவார்கள் என்பது நிச்சயம் ஆனால், நிலைமையானது கேள்வி கேட்பவர் கூறுகிறது போல் அவ்வளவு திருப்திகரமாய் இல்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

கேள்வி :—அஹிம்சையையும் நட்பையும் அனுஷ்டிப்பதானால் முஸ்லிம்களுக்கு விரோதமாக கொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெற்றுவிடுவது அவசியமல்லமா?

பதில் : அக்கிரமம் செய்தவர்கள் பகிரங்கமாக பச்சாதாபம் காட்டினாலன்றி கஷ்டப்பட்டவர்களுடைய அஹிம்சை எந்த விதமான பலனையும் தரமுடியாது. அக்கிரமம் செய்தவர்கள் பச்சாதாபப் படவில்லை என்பது மட்டுமன்று, அவர்கள் ஒளிந்துகொண்டும் இருக்கிறார்கள். கூட்டம் கூட்டமாக கைதி செய்வதை நான் வெறுக்கிறேன். ஆதாரமின்றி வழக்குகளை சிருஷ்டி செய்பவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும்.

### தடை எங்கே?

சர்க்கார் துணி ரேஷனை ஆறில் ஒரு பங்கு குறைக்கப் போவதாக தெரிய வருகிறது, பம்பாயிலும் ஆமதாபாத்திலும் சமூக கலவரங்கள் ஏற்பட்டிருப்பதால் துணி உற்பத்தி குறைந்து விட்டதாக சொல்லுகிறார்கள்.

இரண்டு நகரங்களில் குழப்பம் ஏற்பட்டதின் காரணமாக இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களிலும் துணிப் பஞ்சம் உண்டாக வேண்டுமாம். என்ன விபரீதம் பாருங்கள்.

துணிக்கு வேண்டிய பருத்தி கிராமங்களிலேயே விளைகிறது. ஆனாலும் அங்கே துணி உண்டாக்க முடியவில்லை. காரணமென்ன? படித்தவர்களுடைய மூளைக் கோளாறும் படியாதவருடைய முட்டாள்தனமும் இருவருடைய சோம்பலும் தான்.

'விஞ்ஞானம் வளர்ந்துவரும் காலத்தில் பழைய காலத்து ராட்டினத்தில் நூற்கச் சொல்வதில் ஏதேனும் அர்த்தமுண்டா? மில்கள் இல்லாமல் போதுமான துணி கிடைக்க முடியுமா? கைராட்டினத்தில் நூற்க முடியும். ஆனால் அந்த நூல் எதற்காகும்?' இவ்வாறு படித்தவர்கள் கேட்கிறார்கள். படித்திருந்த போதிலும் கைராட்டின நூலால் துணி நெய்து உடுத்த முடியும் என்பது அவர்களுக்கு புலப்படவில்லை.

ஜனங்களுக்கு துணிப் பஞ்சம் ஏற்பட வேண்டியது அவசியம் தானா? தற்சமயம் வேறு வழியில்லை என்று சர்க்கார் எண்ணுவதாகத் தெரிகிறது. அவர்கள் புது மில்களை ஏற்படுத்த திட்டம் போட்டிருக்கிறார்கள். அது நிறைவேற சில வருஷங்கள் ஆகும். அதுவரை ஜனங்கள் கஷ்டப்பட வேண்டியதுதான் போலும்.

கிடைக்கக் கூடிய துணியை எல்லோருக்கும் சமமாக பங்கிட்டுத் தருவதாக கூறுகிறார்கள், ஆனால் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை. ஏழைகள் கந்தையை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் அளவுக்கு அதிகமாக உடுத்துகிறார்கள். எல்லோருக்கும் சமமாக பங்கிட்டுக் கொடுத்தாலும் கூட புது மில்கள் ஏற்பட்டு வேலை செய்ய ஆரம்பிக்கும் வரை துணிப் பஞ்சம் இருக்க வேண்டிய அவசியமென்ன? நூல் நூற்க நேரமில்லையா? கைராட்டினம் செய்வது கஷ்டமான காரியமா? அல்லது போதுமான பருத்தி விளையவில்லையா?

துணி உண்டாக்க வேண்டுமானால் பருத்தி ராட்டினம் மனிதன் ஆக மூன்று வேண்டும். இந்த மூன்றும் இருக்கும் பொழுது ஏன் துணிப் பஞ்சம் உண்டாக வேண்டும்? துணி உண்டாக்குவதற்கு ஏற்பட்டுள்ள தடை யாது?

பருத்தியிலும் ராட்டினத்திலும் தடையில்லை, மனிதனிடமே அது காணப்படுகிறது. சராசரியாக ஒவ்வொரு விவசாயிடமும் முக்கால் ஏக்கர் பூமியே உண்டு. அதனால் அவருக்கு நூற்பதற்கு வேண்டிய நேரமும் சக்தியும் போதுமான அளவு உண்டு. ஆனால் விவசாயிகளை அரசாண்டு வரும் பெரியவர்களுக்கு இதைக் கண்டு கொள்ள முடியவில்லை

அவர்கள் மில்கள் போதுமான அளவு இல்லாத காலத்தில் கைராட்டினத்தை ஆதரிக்க தயாராக இருக்கிறார்கள். அதற்காக ஒரு திட்டத்தை வகுத்துத் தரும்படி சர்க்கா சங்கத்தைக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் மில்களை ஏற்படுத்த விரும்பும் மாகாணங்களுக்கு திட்டத்தை வகுத்துக் கொடுக்க வேண்டாமென்று காந்தியடிகள் சர்க்கா சங்கத்தினிடம் சொல்லி விட்டார். ஆகவே தடையாய் இருப்பது காந்தியடிகளின் யோசனைதான்.

புது மில்கள் ஏற்படுத்த இரண்டு மூன்று வருஷங்களாகும். அந்தக் காலத்திற்குத்தான் கதர் வேண்டும் என்று கூறினாலும் அந்தக் காலத்திலாவது கதரை அபிவிருத்தி செய்ய தயாராக இருக்கிறார்களா? தயாராக இருந்தால் கைராட்டினத்தை ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு மூன்று வருஷத்தில் ஏற்படுத்திவிட முடியாது என்பதை யோசித்துப் பார்த்தார்களா? கைராட்டினத்தை சுற்ற வேண்டுமானால் அதற்கு வேண்டிய பயிற்சியை அளிக்க வேண்டுமல்லவா? இவைகளையெல்லாம் ஆராய்ந்து கைராட்டினத்தை பரப்பி விட்டால் மில்கள் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் மில் துணியை கிராமத்திற்குக் கொண்டுபோய் தள்ளிவிடுவார்களே. அப்பொழுது கைராட்டினத்தின் கதி என்னவாகும்? ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினத்தை ஏற்படுத்த விரும்பினால் அதை அழிக்கும் மில்களை ஏற்படுத்தவேண்டிய அவசியமென்ன? மில்களை ஏற்படுத்துவதே சர்க்காரின் கொள்கை என்றால் கைராட்டினத்தை ஏற்படுத்தி காலத்தை வீணாக்குவானேன்? காங்கிரஸ்காரர்கள் ஆதரிக்கவேண்டும் என்பதற்காக இப்படி அனாவசியமாக கைராட்டினத்தை ஏற்படுத்தி காசைக் கரியாக்குவானேன்?

இவ்வளவு பணத்தை செலவு பண்ணினாலும் ஏற்படக் கூடிய பலன் யாது? இந்த மத்திய மாகாணத்தில் துணி ரேஷன் ஒவ்வொருவருக்கும் ஆறு கெஜம் மில் துணி, ஆறு கெஜம் கைத்தறி துணி. 12 கெஜம் போதாது 16 கெஜம் வேண்டும். கைராட்டினம் மூலமாக ஒவ்வொருவருக்கும் 4 கெஜம் துணி அதிகப்படியாக கொடுக்க வேண்டுமானால் அது சுலபமான காரியமல்ல. ஏதோ இரண்டு மூன்று லக்ஷ ரூபாயை கதர் அபிவிருத்திக்காக செலவு செய்து விட்டால் காரியம் சித்தியாகி விடாது.

ஆதலால் மந்திரிகள் இதை தீர்க்கமாக யோசிக்க வேண்டும். கதரையும் மில்லையும் ஏக காலத்தில் ஆதரிக்க முடியாது. இப்பொழுது உள்ள மில்கள் வேலை செய்து தேய்ந்துபோக விட்டு விடவேண்டும். புது மில்கள் ஏற்படுத்தக்கூடாது. அப்பொழுதுதான் கதர் அபிவிருத்தி அடைய முடியும்.

சென்னை மந்திரி சபையார் மட்டுமே இப்படிச் செய்ய துணிந்திருக்கிறார்கள், ஆலை முதலாளிகள் அவர்களைத் தாக்கி வருகிறார்கள். கதர் திட்டம் தோல்வி யுறும் என்று ஜோஸியம் கூறுகிறார்கள். இதில் காணப்படும் விபரீதம் என்னவென்றால் இப்படிக் கூறுகிறவர்களுள் அநேகர் தலை முதல் கால் வரை கதர் அணிந்திருப்பதுதான்.

"நாங்கள் கதரை வேண்டாமென்று சொல்லவில்லை. இப்பொழுதுள்ள நிலைமையில் நீங்கள் சொல்லுகிற படி உற்பத்தி செய்ய முடியாது. அகில பாரத சர்க்கா சங்கம் 20 வருஷ காலமாக வேலை செய்துவருகிறது. காங்கிரஸும் ஆதரித்து வருகிறது. அப்படியிருந்தும் இன்னும் போதுமான அளவு உற்பத்தியாகவில்லை யல்லவா ?"—இவ்வாறு அவர்கள் கேட்கிறார்கள்.

இந்தக் கேள்விக்கு நான் கூறும் பதில் இது :—இது வரை கதர் இயக்கத்துக்கு சர்க்கார் விரோதமாகவே இருந்து வந்தது. பலதடவைகளில் அது கைராட்டினங்களை எரித்திருக்கிறது. கதர் கடைகளை பறிமுதல் செய்திருக்கிறது. கதர் அணிந்தவர்களை சிறைப்படுத்திருக்கிறது. தேசத்தில் துணி பஞ்சம் ஏற்பட்ட சமயத்தில்கூட கதரைக் கொளுத்த அது தயங்கியதில்லை. இவ்வளவு கஷ்டங்களுக்கு மிடையில் கதரானது சுயராஜ்யத்தின் சின்னமாகவும் உடையாகவும் இருந்து வந்ததோடு தன்னை ஆதரிக்கவேண்டிய மக்களை மந்திரிகளாகஆக்கவும் செய்திருக்கின்றது. ஆதலால் இது வரை கதருக்காக செய்த வேலை வீண் போனதாக சொல்லமுடியாது. பிரிட்டிஷ் சர்க்காரை வெளியேற்றும்படி செய்த கதரும் அதனுடன் வெளியேறிவிட வேண்டியதுதானா ? காங்கிரஸ் அதிகாரம் பெற்றிருக்கிறது. அந்த அதிகாரத்தைக் கொடுத்த ஆயுதத்தை வைத்துக் கொள்வதா விட்டுவிடுவதா என்பதை காங்கிரஸ்காரர்கள் தீர்மானிக்க வேண்டும்.

விநோபா.

## நபிநாயகத்தின் உறுதி மொழி

மௌலானா அக்ரம் கான் எழுதிய முஸ்தாபா சரித் என்னும் வங்காளி புத்தகத்திலிருந்து கீழ்க்கண்ட பகுதியை முஸ்லீம் நண்பர் ஒருவர் அனுப்பியிருக்கிறார். அதை அவர் தனியாக துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு ஜனங்களுக்கு வழங்கி வருகிறார்.—

"முகம்மது நபிநாயகம் மதினா போய்ச் சேர்ந்ததும் தேசத்தின் சமாதானத்தையும் க்ஷேமத்தையும் கவனிக்க ஆரம்பித்தார். மதினா நகரம் தனித்தனி சுதந்திரமாய் இருந்த மூன்று ஜாதியாருடைய தலைமை ஸ்தலமாய் இருந்தது. அங்கே யூதர்களும் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களும் முஸ்லீம்களும் வசித்து வந்தார்கள். அவர்கள் கொள்கையிலும் மதத்திலும் வழக்க பழக்கங்களிலும் ஒருவர்க்கொருவர் வேறுபட்டவர்களாக இருந்தார்கள். இந்த மூன்று ஜாதியார்களையும் ஒரே சமூகமாக செய்ய வேண்டிய அவசியத்தை நபிநாயகம் உணர்ந்தார். தேசத்திலுள்ள வித்தியாசமான மதத்தார்கள் தங்கள் மதங்களை தனியாக அனுஷ்டிக்கவும் அதேசமயத்தில் தங்கள் எல்லோருக்கும் பொதுவான தாய்நாட்டுக்கு ஒன்று சேர்ந்து சேவை செய்யவும் செய்யலாம் என்பதை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. நபிநாயகம் அவ்விதமாக ஒரு சமூகத்தை உண்டாக்குவது சாத்தியமான காரியமென்றும் விரும்பத்தக்க காரியமென்றும் எண்ணினார்.

உலக சரித்திரத்தில் முதல் முதலாக இந்த லக்ஷியத்தை எழுதப்படிக்கத் தெரியாத முகமது நபிநாயகம் தான் போதித்தார். அவர் யூதர்களையும் விக்கிரக ஆராதனை செய்பவர்களையும் முஸ்லீம்களையும் ஒன்றாக கூட்டி வைத்து முதல் சர்வதேச உடன்படிக்கையில் கையெழுத்து இடும்படி செய்தார். இந்தவிதமாக ஒருவர்க்கொருவர் விரோதமாக சண்டை போட்டுக் கொண்டிருந்த மதத்தார்களை ஐக்கியப்படுத்தி ஒரு குடியரசை சிருஷ்டி செய்தார். அந்த உடன்படிக்கையிலுள்ள சில நிபந்தனைகள் வருமாறு :—

(1) யூதர்களும் விக்கிரக ஆராதனை செய்வோர்களும் முஸ்லிம்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களோ அதே சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஆவார்கள்.

(2) அவர்கள் எல்லோரும் தேசத்தின் சுதந்திரத்தை காப்பாற்றுவதற்காக ஒன்று சேர்ந்து போர் புரிவார்கள்.

(3) அவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மதங்களை தாராளமாக அனுஷ்டிக்கலாம். ஒருவரை ஒருவர் தடுக்கமாட்டார்கள்.

(4) முஸ்லிம்கள் மற்ற ஜாதியாரிடம் அன்பாக நடந்து கொள்வதோடு அவர்களுடைய க்ஷேமத்திற்காக உழைக்கவும் வேண்டும். மற்றவர்களை எந்த விதத்திலும் கெடுக்க வேண்டுமென்று ஒரு பொழுதும் கருதலாகாது.

(5) இந்த உறுதி மொழி அல்லாவின் பெயரால் வாங்கப்படுகிறது. இது எந்தக் காலத்திற்கும் உறுதியானது. இதை மீறுகிறவர்கள் அல்லாவின் கோபத்திற்கு ஆளாவார்கள்."

## மூலாதாரக் கல்வி

மூலாதாரக் கல்வி விஷயத்தில் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் ஏழுவருஷ காலமாக செய்துவரும் வேலையைப்பற்றிய அறிக்கையை அனுப்பி யிருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய கல்வி முறையை முற்றிலும் புரட்சிகரமாக மாற்றியமைக்க முயன்று கொண்டு இருப்பதால் அந்த அறிக்கையை கல்வி விஷயத்தில் அக்கரை உள்ளவர்கள் எல்லோரும் வாசிக்க வேண்டியது அவசியமாகும். முக்கியமான பகுதிகள் வருமாறு :—

சேவா கிராமத்திலும் சாப்பரானியிலும் மூலாதார கல்வி ஏழு வருஷமாக நடந்து வருகிறது. மாணவர்களுடைய சரீர, அறிவு, ஆன்ம வளர்ச்சியை அளந்து பார்க்கவேண்டி யிருக்கிறது. இங்கிலீஷ் தவிர மற்றப்படி மெட்ரிகுலேஷன் படிப்புக்கு தக்கதாக இருக்கவேண்டுமென்று எண்ணினோம். மெட்ரிகுலேஷன் படிப்பு என்றால் ஐந்து பாடங்களில் குறிப்பிட்ட மார்க்கு வாங்கி சர்வகலாசாலை படிப்புக்குத் தகுந்தவராக ஆவதேயாகும். வருஷக்கடைசியில் நடைபெறும் பரிக்ஷையில் சரியான மார்க்கு வாங்குகிற மாணவரே பரிக்ஷையில் தேறுவார்.

மூலாதாரக் கல்வி முறையில் கைத்தொழில் மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுகிறது. அதன் சம்பந்தமாகவே மற்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆசிரியர் கற்பிப்பதிலிருந்து கற்பதோடு மாணவர்கள் தாங்களாக கவனிப்பதாலும், அனுபவிப்பதாலும் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்குப்போக பரீக்ஷை கிடையாது. தினந்தோறும் செய்கிறவேலை, ஒழுங்காக ஆஜராவது, ஆசிரியருடைய அபிப்பிராயம், இவைகளைப் பொறுத்தே கீழ் வகுப்பிலிருந்து மேல் வகுப்புக்கு அனுப்பிவருகிறார்கள்.

இந்த ஏழுவருஷ திட்டத்துக்கு முன்னதாக பாலர் வகுப்பு ஒரு வருஷம் நடைபெறும். இப்படி எட்டு வருஷம் படித்த மாணவர்கள் பெறும் நன்மைகள் வருமாறு :—

(1) ஆரோக்கியமும் சுருசுருப்பும் கடினமானவேலையைச் செய்யக்கூடிய பலமும் பெறுதல்.

(2) ஜனங்கள் கூட்டுறவுமுறையில் வாழ வேண்டிய புதிய சமுதாய அமைப்பையும் கிராமக்கைத்தொழில்களின் அவசியத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளுதல்.

(3) அவசியமானால் மூலாதார கைத்தொழில் மூலம் தமக்கு வேண்டிய உணவையும், உடையையும் சம்பாதித்துக் கொள்ளக் கூடிய திறமையைப் பெறுதல்.

(4) பருத்தியைக்கொண்டு துணி உற்பத்தி செய்யக் கூடிய திறமை.

(5) தமக்கு வேண்டிய காய்கறிகளை பயிர்செய்து கொள்ளக்கூடிய திறமை.

(6) சமையல் செய்தல், பரிமாறுதல், கணக்கு வைத்துக்கொள்ளுதல், உணவுச் சாமான்களை பத்திரப்படுத்துதல் போன்ற காரியங்களுக்கு வேண்டிய திறமை.

(7) உணவைப் பற்றியும் ஆரோக்கியத்தைப் பற்றியும் தெரியவேண்டிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல்.

(8) உடம்பையும் வீட்டையும் ஊரையும் சுகாதாரமுள்ளதாக செய்வதற்கு வேண்டியவைகளை தெரிந்து கொள்ளுதல்.

(9) பிரதம சிகிச்சை, சாதாரணமான வியாதிகளை குணப்படுத்துதல் இவைகளுக்கு வேண்டிய அறிவு பெறுதல்.

(10) கூட்டுறவுக் கடைகளை நடத்தவும் கணக்கு வைத்துக்கொள்ளவும் தெரிந்துகொள்ளுதல்.

(11) பொதுக்கூட்டங்களில் தட்டுத்தடையில்லாமல் தெளிவாக பேசக்கூடிய திறமை.

(12) தம்முடைய கருத்தை தெளிவாக எழுதவும் அறிக்கைகள் தயாரிக்கவும் வேண்டிய திறமை.

(13) தாய் பாஷையிலுள்ள இலக்கியங்களை அறிவதும் ஹிந்துஸ்தானியை உபயோகத்துக்கு வேண்டிய அளவு தெரிந்து கொள்ளுவதும்,

(14) எளிய ஹிந்துஸ்தானி நடை படிக்கவும் எழுதவும் தெரிந்துகொள்ளுதல்.

(15) ஒன்று சேர்ந்து தேசிய கீதங்களையும் தோத்திர கீதங்களையும் பாடக்கூடிய திறமை.

(16) நல்லஓவியங்களை அனுபவிக்கவும் ஓவியங்கள் தீட்டவும் தெரிந்துகொள்ளுதல்.

17) லைசக்கிளிலும் குதிரையிலும் சவாரி செய்யவும் வண்டி ஓட்டவும் தெரிந்துகொள்ளுதல்.

(18) பள்ளிக்கூடத்திலும் கிராமத்திலும் விழாக்கள் நடத்தக்கூடிய திறமை.

(19) தினசரி பத்திரிகைகள் படித்து உலக விஷயங்களை அறிந்துகொள்ளக் கூடிய திறமை.

(20) மூலாதார கைத்தொழில் சம்பந்தமான சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ளுதல்.

(21) பயிர் செய்வதிலும் சமையல் செய்வதிலும் ஆரோக்கியமாய் இருப்பதிலும் கிராம சுகாதாரத்திலும் கைத்தொழிலிலும் தெரியவேண்டிய விஞ்ஞான உண்மைகளை தெரிந்துகொள்ளுதல்.

(22) உணவு மூலமாகவும் உடை மூலமாகவும் இந்தியாவின் பூகோள சாஸ்திரத்தையும் உலக பூகோள சாஸ்திரத்தையும் தெரிந்து கொள்ளுதல்.

(23) பத்திரிகைகளை அறிவுடன் உபயோகிக்க தெரிந்துகொள்ளுதல்.

(24) இந்தியாவில் நடைபெறும் சுதந்திர யுத்தத்தின் சரித்திரத்தை ஆதியோடந்தமாக தெரிந்து கொள்ளுதல்.

(25) இந்தியாவிலுள்ள சகல மதங்களுக்கும் மரியாதை செய்வதும் சமூக ஒற்றுமை உண்டாக வேண்டுமென்று ஆசைப்படுவதும்.

(26) ஜாதி வித்தியாசங்களை அகற்றிவிடுதல். தன் சொந்த கிராமத்திடம் அன்பு கொள்ளுதலும் கிராமங்களிலிருந்து வேலை செய்ய விரும்புதலும்.

மத்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கல்வி ஆலோசனை சபையார் சார்ஜன்ட் திட்டம் என்ற ஒரு கல்வித் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்.

அதில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள் :—

"ஆலோசனை சபையார் வகுத்திருக்கும் மூலக் கல்வியானது வார்தா திட்டத்திலுள்ள பல கருத்துக்களை ஏற்றுக்கொண் டிருக்கிறது. செயல் மூலம் கற்க வேண்டும் என்னும் பிரதான தத்துவத்தை உலகத்திலுள்ள சகல கல்வி நிபுணர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். எழுதவும், படிக்கவும், கணக்குச் செய்யவும், கற்றுக்கொண்டால் போதாது என்பது உண்மைதான். ஆனால் மாணவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டே அவர்களுடைய கல்விச் செலவு நடைபெற வேண்டுமென்று வார்தாதிட்டம் கூறுவதை ஆலோசனை சபையார் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த பணத்தைக் கொண்டு பரிசோதனை சாலைக்கு வேண்டிய பொருள்களை வாங்க மட்டுமே முடியுமென்று கருதுகிறார்கள்"

ஆகவே ஆலோசனை சபையார் மூலாதார தேசியக் கல்விக்கு வேண்டிய பணம் அதன் கைத்தொழில் மூலமாகவே கிடைக்கவேண்டும் என்ற பிரதான தத்துவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சென்ற 8 வருஷ அனுபவம் எங்கள் தத்துவம் சரியானது என்பதை வலியுறுத்துகிறது. கல்வி கற்பிப்பதற்காக தேர்ந்தெடுத்துக்கொள்ளும் கைத்தொழில் உபயோகமான கைத்தொழிலாய் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் உபயோகமான பொருள்களை உண்டாக்கி உள்ளூரிலேயே விற்று பணமாக்கிகொள்ள முடியும். ஆதலால் எந்தக் கைத்தொழிலையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் உபயோகமான கைத்தொழிலையே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

1945-ம் வருஷத்தில் நடந்த தேசிய கல்வி மகாநாட்டை திறந்துவைத்தபொழுது காந்தியடிகள் கூறியதாவது :—

"இந்த நயிதலீம் சங்கத்தார் பணத்தை எதிர்பார்த்து நிற்கவேண்டிய தில்லை. கல்விக்கு வேண்டிய பணம் கல்வி முறையிலிருந்தே கிடைக்கவேண்டும். யார் என்ன சொன்னபோதிலும் அப்படிப்பட்ட கல்வியே உண்மையான கல்வி என்பதை நான் அறிவேன்."

சேவா கிராமத்திலும் ஒரிஸாவிலும் வங்காளத்திலும் பீஹாரிலும் உள்ள மூலாதார பாடசாலைகளில் இத்தகைய திட்டத்தை நிறைவேற்றிவைக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

சேவாகிராமத்து பள்ளிக்கூடத்தில் சென்ற வருஷம் 85 மாணவர்கள் படித்தார்கள். 200 நாள் நடந்தது, தினந்தோறும் 2 மணி நேரம் கைத்தொழில் செய்தார்கள். 2818 சிட்டம் நூல் உற்பத்தி ஆயிற்று. அதைக் கொண்டு 705 கஜம் துணி உற்பத்தி செய்யலாம். மேல் வகுப்பிலுள்ள பிள்ளைகள் 555 கஜம் நெசவு செய்தார்கள்.

5-வது வகுப்பு மாணவர்கள் ½ ஏக்கர் பூமியில் மொத்தம் 4042 சேர் நிறையுள்ள காய்கறிகளை உற்பத்தி செய்தார்கள. நூல்நூற்றதிலிருந்தும், நெய்ததிலிருந்தும் பயிர் செய்ததிலிருந்தும் மொத்தம் ரூ 1276-4-6 கிடைத்தது. 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர். ஒரு ஆசிரியருக்கு மாதச் சம்பளம் 35 ரூ. அப்படி 3 ஆசிரியர்களுக்கு அந்த வருமானத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்டது.

இவ்வளவு வெற்றி பெற்ற போதிலும் இன்னும் குறைகள் காணப்படவே செய்கின்றன. மூலாதார கல்விக்கு வேண்டிய புஸ்தகங்கள் இன்னும் தயாராகவில்லை. பயிற்சி பெற்ற ஊழியர்களும் குறைவாகவே இருக்கிறார்கள். ஆனால் மூலாதாரக் கல்வி நிலைத்து விடக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. இந்த புதுக் கல்விதான் இந்தியாவிலுள்ள குழந்தைகளுக்கு இனிமேல் கொடுக்கப்பட வேண்டிய தேசியக் கல்வியாகும். இந்தப் பெரிய கல்விப் புரட்சிக்கு நாம் முற்றிலும் தயாராக இருக்கவில்லை. ஆயினும் இதுதான் சரியான முறையென்று நம்முடைய மனத்தில் உறுதியாகிவிடுமானால் அதை வெற்றிகரமாக நடத்துவதற்கு வேண்டிய வழியை எளிதில் கண்டு விடலாம். இப்பொழுது கல்வி விஷயத்தில் பிற்போக்காக உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது. ஆனால் வருங் காலத்தில் அதுவே புதிய கல்வியின் மூலம் புதிய உலகத்தை சிருஷ்டி செய்வதற்கு வேண்டிய வழியைக் காட்டும்.

## பசு வளர்க்கும் திட்டம்

சேத் ஜம்னலால்ஜி வருஷாப்திக தினம் பெப்ரவரி 11-ந்தேதி. அது பசு சேவையில் அவருக்கு இருந்த அசையாத் சிரத்தையை ஞாபகப்படுத்துகிறது. அவர் இறந்து 5 வருஷங்கள் ஆகின்றன. மற்ற நாட்டார்கள் 5 வருஷ திட்டங்கள் வகுத்து அவைகளை நிறைவேற்றி தங்கள் தேசத்தை முன்னேற்றம் அடையச் செய்திருக்கிறார்கள். ஆனால் நாம் இந்த 5 வருஷ காலத்தில் எதுவும் செய்யாமல் இருந்து விட்டோம். ஆயினும் இந்தக் காலத்தில் நாம் சுயராஜ்யத்திற்காக போர்புரிந்து அரசியல் அதிகாரத்தை அடைந்திருக்கிறோம். அந்த அதிகாரத்தை பசு அபிவிருத்தி விஷயத்தில் உபயோகப்படுத்தலாம். பசு விஷயத்தில் நாம் முன்னேறாவிட்டாலும் அரசியல் அதிகார விஷயத்தில் முன்னேறி இருப்பது ஒரு பெரிய வெற்றியேயாகும். ஆனால் அடுத்த 5 வருஷ காலத்திற்கு ஒரு திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்ற கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும்.

இந்தக் குழப்பமான காலத்திலும்கூட பசு சம்ரட்சண சங்கத்தார் உபயோகமான வேலை செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வேலை குறைவாயிருந்த போதிலும் மிகுந்த பலனுள்ளதாகும். அதைக்கொண்டு எதிர்காலத்திற்கு வேண்டிய திட்டத்தை வகுத்துக்கொள்ள முடியும். நாம் நம்முடைய பசுக்களைக்கொண்டு அதிகமாக பால் கொடுக்கக்கூடிய பசு யினத்தையும் அதிக வேலை செய்யக்கூடிய காளையினத்தையும் சிருஷ்டிக்க முடியுமென்று சேவா கிராமத்திலும் கோபுரி பசு மடத்திலும் நடத்தப்பட்ட பரிசோதனைகள் தெளிவாக்குகின்றன. அங்கங்கே உள்ள பசுக்களை வைத்துத்தான் நல்ல பசு யினங்களையும் காளையினங்களையும் உற்பத்தி செய்வது அவசியமாகும். இந்த ஸ்தாபனங்கள் அதிகப் பணச்செலவில்லாமல் இந்தக் காரியத்தை நடத்தி வருகின்றனர். லட்சியத்தை அடைந்துவிட்டதாக சொல்ல முடியாது. ஆயினும் கிடைத்துள்ள வெற்றி அதிகமானதே யாகும்.

மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டிருப்பதால் நம்முடைய பசுக்களையும் காளைகளையும் அபிவிருத்தி செய்யும் பொறுப்பு நமக்கு அதிகரித்திருக்கிறது. நாம் செய்ய வேண்டிய வேலை இதுவென்று தெளிவாக வகுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். போதுமான அளவு நல்ல பால் நகரங்களுக்கு கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அது சம்பந்தமாக கீழ்க்கண்ட யோஜனைகளைக் கூற விரும்புகிறேன் :—

1. பால் வேண்டுமென்று எண்ணியவுடன் அதிகப் பால் தரக்கூடிய பசுக்களை அயலிடங்களிலிருந்து தருவிக்க வேண்டுமென்று எண்ண ஆரம்பித்து விடுகிறோம். ஆனால் இது அவசியமில்லை. கூடுமானவரை அங்கங்கேஉள்ள பசுக்களை வைத்தே அபிவிருத்தி செய்ய வேண்டும். உள்ளூர் பசுக்களைத் தள்ளி விட்டால் விவசாயிகளுக்கு நன்மை யில்லை. தங்களிடமுள்ள பசுக்களை எப்படி அபிவிருத்தி செய்வது? என்பதை அவர்களுக்கு காட்ட வேண்டியது அவசியமாகும். நகரங்களுக்கு பால் அனுப்ப வேண்டிய ஆத்திரத்தில் கிராமங்களிலுள்ள பசுக்களை அலட்சியம் செய்வது தீமை தருவதாகும்.

2. பால் தரும் பசுக்களை உண்டாக்கினால் மட்டும் போதாது. விவசாயத்திற்கு வேண்டிய நல்ல காளைகளையும் உண்டாக்க வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டே வேலை செய்ய வேண்டும். ஒன்றை விட்டு ஒன்று தனித்து நடைபெற முடியாது. பசுக்கள் நிறைய பால் தரவும் வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய நல்ல காளைகளைத் தரவும் வேண்டும். விவசாயத்திற்கு காளைகளை எதிர்பாராமலிருப்பதும் மாடுகளை உணவாக உபயோகிப்பதுமான தேசங்கள்தான் எங்களுக்கு அதிகப்பால் கிடைத்தால் போதும் காளைகளைப் பற்றிக் கவலையில்லையென்று சொல்ல முடியும். ஆனால் இந்தியாவிலோ அதிகமான பாலும் நல்ல காளையும் தரக் கூடிய பசுவே தேவையாகும்.

3) நகரங்களுக்குப் பால் அனுப்ப வேண்டிய கடமை கிராமங்களுக்குக் கிடையாது. கிராமத்திலுள்ள ஜனங்கள் அதிகமாகப் பாலைக் குடிக்க வேண்டும், அதற்குப் போக மீதியுள்ளதைத்தான் விற்க வேண்டும். அதிகமாகப் பாலைக் குடிக்கக் கூடிய அளவு கிராமங்களில் பாலுற்பத்தி பெருகினால் தான் இது சாத்தியமாகும்.

4) விவசாயம், பசு வளர்த்தல், செக்கில் எண்ணை ஆட்டுதல், தோல் பதனிடுதல், நல்ல உரங்கள் தயாரித்தல் இவைகளெல்லாம் ஒன்றாக நடைபெற வேண்டும். இந்தக் கைத் தொழில்கள் எல்லாம் ஒன்றாக நடைபெற்றால்தான் விவசாயிகளுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் போதுமான பால் கிடைக்கும். பசு சம்ரக்ஷணைத் திட்டம் வகுத்தால் இந்தக் கைத் தொழில்களெல்லாம் ஏக காலத்தில் நடைபெறும்படி செய்ய வேண்டும்.

5) பசு வளர்த்தலை மற்ற கிராமக் கைத் தொழில்களிலிருந்து தனியாகப் பிரித்து விட முடியாது. விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய அவசியமான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளாவிட்டால் அயலூரிகளிலிருந்து தருவிக்கவேண்டியவர்களாவார்கள். அப்பொழுது அவர்களுக்கு அவைகளை வாங்குவதற்கு ரொக்கப் பணம் தேவையாகும். இந்த நிலைமை ஏற்பட்டால் அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலைக் குடிக்க முடியாது. ரொக்கப் பணத்துக்கு விற்க வேண்டியவர்களாகவேயிருப்பார்கள்.

6. விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய காளைகளை அயலிடங்களி லிருந்து தருவிக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் நல்ல காளைகளை அபிவிர்த்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் அதற்காக அரசாங்கத்தார் பொலி காளைகள் உதவுவது போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இந்தக் காரியத்தை அவர்கள் பிரதானமான காரியமாகக் கருதவேண்டும்.

குறைந்த பட்சம் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால் தான் பசுவை அபிவிர்த்தி செய்ய முடியும். இந்த யோசனைகளை ஞாபகத்தில் வைத்துக் கொண்டுப் பசு வளர்த்தல் திட்டம் வகுத்தால் தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகும். தவறான முறையில் வேலை செய்ய ஆரம்பித்தால் எவ்வித நன்மையும் உண்டாக மாட்டாது. நம்முடைய நேரமும் சக்தியும் வீணாய்ப் போகும். ஆதலால் பசு வளர்த்தல் திட்டம் தயாரிக்கும் பொழுது இந்த விஷயங்களை மறந்து விடலாகாது.

விநோபா.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.